மாயன்
பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Traditional Thoughts in the Poems of the Poet Bala

Dr. S. Kavitha

Assistant Professor, Department of Tamil, Government Arts College (Autonomous), Karur, India

Manuscript ID : **MT1A0007**

Volume : **1**

Issue : **1**

Month : **September**

Year : **2021**

Received: 20.08.2021

Revised: 27.08.2021

Accepted: 01.09.2021

Published: 05.09.2021

Pages : 73-85

ABSTRACT:

The poet is the one who unites the inner senses and does the work of connecting the people of the world. Renewal Poetry is the modern Niagara that infuses innovative ideas with each study. A. Balachandran, known as the poet Bala, is a great poet. He had a unique identity in the Tamil script. In his poems the traditional thoughts of the Tamils are always evident. He points out that we have lost genetic elements due to the change of time. He says that the old should be replaced by the new, but he also condemns the way in which today's people think that civilization is negative. The poet effectively embodies not only about man but also about the life of nature in his poems.

KEYWORDS:

Interior, Storytelling, Art mind, Shrine, Thirukkolam, Civilization, Madu, Humane

REFERENCES :

1. Bala, Puthukavithai oru Puthuparvai, Agaram Publication, Thanjavur-7, Fifth Edition, January 2011.
2. Bala, Thinnaigalum Varaverparaigalum, Kavitha Publication, Chennai - 17, First Edition, December 1999.
3. Bala, Tamil Elakkiyathin Padaippu Pinpulam, Annam Publication, Thanjavur - 7, First Edition - 2013.
4. Bala, Thinnaigalum Varaverparaigalum, Kavitha Publication, Chennai - 17, First Edition, December 1999.
5. Bala, Puthukavithai oru Puthuparvai, Agaram Publication, Thanjavur-7, Fifth Edition, January 2011.

கவிஞர் பாலாவின் கவிதைகளில் பழமரபுச் சிந்தனைகள்

முனைவர் செ. கவிதா,
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி(தன்னாட்சி), கரூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

உள்ளத்து உணர்வுகளை ஒருங்கமைத்து உலகத்து மனிதர்களைப் பண்படச்சமைக்கும் வேலையைச் செய்பவனே கவிஞன். புதுக்கவிதை என்பது பயில்தோறும் பயில்தோறும் புதுப்புதுக் கருத்துகளை அள்ளித் தெளிக்கும் நவீன நயாகரா. கவிஞர் பாலா என்றழைக்கப்படும் ஆர்.பாலச்சந்திரன் மிகச் சிறந்த கவிஞர். தமிழ் எழுத்துலகில் தனக்கென தனித்த அடையாளத்தைக் கொண்டிருந்தவர். அவரது கவிதைகளில் தமிழரின் மரபு சார்ந்த சிந்தனைகள் எப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். கால மாற்றத்தால் நாம் மரபுக் கூறுகளை இழந்திருப்பதாகச் சுட்டுகிறார். பழையன கழிந்து புதியன புகுத்தல் வேண்டும் என்பதில் உடன்பாடு உண்டு, இருப்பினும் இன்றைய மனிதர்கள் நாகரீகம் எனக்கருதி எதிர்மறையான சிலசெயல்கள் புரிவதைக் கண்டிக்கவும் செய்கிறார். மனிதன் மட்டுமல்லாது இயற்கையின் வாழ்வியல் முறைகளையும் கவிஞர் தம்கவிதைகளில் திறம்பட புனைந்துள்ளார்.

கருச்சொற்கள்

உள்வெளி, கதைத்தல், கலைமனம், திண்ணை, திருக்கோலம், நாகரிகம், மடு, மனிதம்

முன்னுரை

உள்ளத்து உணர்வுகளை ஒருங்கமைத்து உலகத்து மனிதர்களைப் பண்படச்சமைக்கும் வேலையைச் செய்பவனே கவிஞன். சுருங்கச்சொல்லி விளங்கவைப்பதே இலகு கவிதையின் தலைக்கடன். புதுக்கவிதை என்பது பயில்தோறும் பயில்தோறும் புதுப்புதுக் கருத்துகளை அள்ளித் தெளிக்கும் நவீன நயாகரா. நவீனம் என்பதே வீனர்களின் வாதம் என்பார் சிலர். பழையன கழிதலும் புதியன புகுதலும் நடைமுறை நிகழ்வுதான். ஒப்பிட்டு வாழ்வது கட்டாயமில்லை. ஒப்பாமல் வாழ்வது வடுக்களைத்தான் தரும். இவ்வகையில் கவிஞர் பாலா என்றழைக்கப்படும் ஆர்.பாலச்சந்திரன் தனித்த அடையாளத்துடன் புதுக்கவிதை உலகில் வளம் வருகின்றார்.

மனிதனின் தவிர்க்க இயலாத முத்தேவைகளில் முதன்மையானது உணவு, இரண்டாவதாக உடை, மூன்றாவதாகத் தேவைப்படுவது உறைவிடமாகும். வானமே கூறையாய் வாழ்ந்தவன் நாடுகண்டான்; நாகரீகம் அடைந்தான். நாகரீக வாழ்வெனக் கருதித் தன்அடையாளத்தைத் தொலைக்கவும் செய்தான். இன்று வாழ்வியல் முறையில் பலவகையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது பொய்யில்லை கண்ட உண்மை.

பாலா பன்முகச் சிந்தனையாளர். இருப்பினும் அவர் மிகச் சிறந்த படைப்பாளர். பாலாவின் கவிதைகளில் பண்பாடும் மரபும் கட்டாயம் வெளிப்படும். பழமையைப் போற்றும் பாலாவின் கவிதை. அடையாளங்களைத் தொலைத்தவர்களுக்கு இவரது கவிதைதான் முகவரிச்சீட்டு. புன்னகைப் பூக்களை வெளிப்படுத்தாத உதடுகளைக் கண்டித்தார். வெற்று விளம்பரங்களைச் சாடினார். திண்ணையைத் திசை திரும்பவைத்தார். விண்ணையும் பாடி மகிழ்ந்தார். அவர் ஒரு சுயம்பு. உண்மையை அவரது கவிதைகள் திசையெங்கும் இயம்பும். பாலாவின் கவிதைச் சிறப்பை இனி காணலாம்.

பாலாவும் பழமரபும்

பாலா தம்கவிதைகளில் தமிழரின் பழமரபுச் சிந்தனைகளைப் பலவாறு சிறப்பித்துக் கூறியுள்ளார். 'மரபு என்பது முந்தைய தலைமுறைகள் சேர்த்து வைத்திருக்கும் அனுபவம்' 1 என்கிறார். நமது மூதாதையரின் அனுபவ அறிவு ஆற்றல் வாய்ந்தது. காலந்தோறும் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அனுபவப் புதையல்களின் வெளிப்பாடுகளே பழமரபுச் சிந்தனைகள் ஆகும். அறிவியல் வளர்ச்சியால் இன்றைய தலைமுறையினர் பலவகையான மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளனர். தலைமுறை மாற்றத்தால் பழமைவாதத்தை மறந்தும், மறுத்தும் கூறிவரும் கருத்துக்களுக்குப் பதில் தரும் விதமாக பாலாவின் கவிதைகள் அமைந்துள்ளன.

திண்ணையும் வரவேற்பறையும்

திண்ணை ஒருகாலத்தில் வீடுகளின் வரவேற்பறை. அது, நவீனத்தை உருவாக்கிய கல்விக்கூடமாகவும் திகழ்ந்தது. திண்ணை அந்நியர்களின் பேச்சுப்பட்டறை. அகதிகளின் தற்காலிக இல்லம். ஏன் நாட்டாமைகளின் நீதிமன்றம். வீதிபார்த்திருந்த திண்ணைகளின் விதி மாறியது. இன்று திண்ணைகள் வரவேற்பறைகளாக உருமாற்றம் அடைந்துள்ளது. பழையன கழிந்து புதியன புகுந்து விட்டது. வீடு தன் உருவத்தை மட்டுமே மாற்றியது. ஆனால், திண்ணையோ தன் அடையாளத்தை முற்றிலும் இழந்துள்ளது. இதனை,

தெருக்கள் எல்லாம் வீடுகள் நிறைவாய் நின்றதும்

வீடுகள்தோறும் வீதிபார்த்துத் திண்ணைகள் கிடந்ததும்

- ஒரு காலம்[2]

என்று குறிப்பிடுள்ளார். தெருக்களில் வீடுகள் தோறும் அன்பின் அழைப்பாய் வீட்டின் இருபுறமும் குறுகியும், நீண்டும் இடவசதிக்கு ஏற்ப திண்ணைகள் கட்டப்பட்டன. அது மனிதர்களின் பரந்து, விரிந்த உள்ளத்தைக் காட்டுவதாக அமைந்திருந்தன. இன்றோ முற்றிலும் இந்நிலை மாறி திண்ணைகள் இருந்த இடத்தில் வரவேற்பறைகள் வந்து வீட்டை அலங்காரம் செய்கின்றன.

திண்ணைகள் இடித்துத் திருக்கோலமாய்

வரவேற்பறைகள் வந்து விட்டன

- இன்று[3]

என்று பாலா குறிப்பிடுகின்றார். இன்றைய நவீன வாழ்க்கை முறையில் பார்ப்பவரை மயக்கும் வண்ணப் படங்களும், சுகமான இருக்கைகளும் போட்டு வரவேற்பறையை அலங்கரித்துள்ளனர். முந்தைய காலகட்டத்தில் வீட்டில் குடும்பப் புகைப்படமும், முன்னோர்களின் புகைப்படமும் பல்வேறு மனிதர்களின் உறவு முறைகளைச் சொல்லும். இன்றோ இத்தகைய செயல்கள் முற்றிலும் மாறிவிட்டன. ஒருபக்கம் வரவேற்பறைகள் வளர்ந்து வருகின்றன. மற்றொரு பக்கம் மனிதனின் மனம் பரந்த நிலையில் இருந்து குறுகிய நிலைக்கு மாறி வருகின்றது. இதனை ஆசிரியர் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்,

கால்பதிக்கச் சுகமான விரிப்புகள்

கலைமனம் காட்டிட கண்ணாடி அறைகளில்

வரிசையில் வைத்த அழகுப் பொம்மைகள்

வெளிச்சமும் வெப்பமும் வடிகட்டிட

சன்னல்களில் சதிராடும் நேர்த்தித் திரைகள்

தாகம் தணிக்க ஐஸ் பெட்டிகள்

எல்லாம் இருக்கிறது வரவேற்பறைகளில்

மனிதம் இருக்கிறதா அங்கே?[4]

மனமிருந்தால் மார்க்கமுண்டு என்பர். பணம், மனம், பொருள் என எல்லாமே இருக்கிறது மனிதர்களிடம்; ஆனால் மனிதத்தை மட்டும் காணவே இல்லை. நாகரீகம் என்ற பெயரில் ஆக்கிரமித்துக் கொள்ளும் இவைகள் உண்மையில் நாகரீகத்தின் வெளிப்பாடுகளாய் அமையவில்லை. “திண்ணைப்பேச்சு மனிதர்களிடம் ஒரு கண்ணாயிருக்கனும் அண்ணாச்சி” என்று குறிப்பிட்டாலும் திண்ணை நன்மைகள் பலவற்றிற்கும் ஆதாரமாய் அமைந்துள்ளதை மறக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது.

வரவேற்பறைகளில் ஒரு வழிப்போக்கன் உட்கார்ந்து நீர் அருந்த முடியுமா? அல்லது அக்கம் பக்கம் உள்ளவர் எவராயினும் நம் வீட்டில் வந்து உட்கார்ந்து தாத்தா பாட்டியுடன் ஊர்க்கதைப் பேச முடியுமா? எல்லாம் மாறி இன்று தொலைக்காட்சி முன் அனைவரும் ஒரு ஊமைகளாய் அமர்ந்திருப்பதைத்தான் காணமுடிகின்றது.

அமரவும் கிடக்கவும்

அடுத்தவருடன் கதைக்கவும்

என்று நகர்ந்த நாட்களில்

அந்த திண்ணையில்

மனிதம் பொதுவாய் இருந்ததுண்டு[5]

மனிதன் மனிதநேயத்துடன் வாழ்ந்ததால் கூட்டுக் குடும்பங்கள் பெருகி இருந்தன. இன்று வாழ்க்கை கணினி மயமாகி விட்டது. அடுத்த வீட்டில் உள்ளவர்களிடம் பேசவும் பொழுதுபோக்கவும் அரிதாகி விட்டதால் வாழ்க்கை நன்றாகத் தான் உள்ளது மனிதம் மட்டும் மறைந்து வருகிறது.

திண்ணைகள் இடித்து

வரவேற்பறை கட்டும் நண்பரே

நம் உள்வெளி நாகரிகத்தில்

வாழ்க்கை அலங்காரமாகிவிட்டது

மனிதம்தான் மூளியாகி விட்டது.[6]

உள்வெளி நாகரீகத்தில் காணப்படும் அலங்கார வாழ்க்கையில் மனிதம் தன் அலங்காரத்தை இழந்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பறவையும் மனிதனும்

மனிதனின் வாழ்க்கையானது கனவுகள், கற்பனைகள், இன்பங்கள், துன்பங்கள், பலங்கள், பலவீனங்கள், ஆசைகள், இழப்புகள் என அனைத்தும் கலந்த கலவையாகும். அக்கலவையில் தேவையானதை மட்டும் எடுத்துக் கொண்டு மனித நேயத்துடன் வாழ்ந்தாலே மனிதன் சிறப்பான வகையில் வாழலாம் என்பதே கவிஞர் பாலாவின் கருத்தாக்கமாகும்.

'இருபதாம் நூற்றாண்டின் இலக்கியப் பின்புலத்திற்கு, அதாவது காலமும் இடமும் உருவாக்கும் களங்களுக்கு ஏற்ப இலக்கியங்கள் வண்ணமும் வனப்பும் பெற்றன. பழம் நினைவுகளில் திளைக்கும் காலமயக்கும் இலக்கிய நிலைகளில் காணலாம். சிற்றூர்களும் பேரூர்களும், நகரங்களும் அதன் பகுதிகளும், இயற்கைசார் இடங்களும் காலம் நிகழ்த்திய மாற்றங்களைச் சந்தித்தன' [7] என்கிறார்.

நல்லவற்றைக் கண்டு மகிழ்வதும் அல்லவற்றைக் கண்டு மனம் குமுறுவதும் இயல்புதான். 'மனிதர் வட்டத்தைத் தாண்டிப் பறவைகள், விலங்குகள், மரம், செடி கொடிகள், ஒளி இருள் நிறைந்த பெரும்பரப்பை மனம் விருப்புடன் நேசிக்கிறது. அவற்றின் ஒன்றிப்பில் மகிழ்ச்சி பெறுகிறது. இதுதான் மனித இயல்பு என்று தோன்றுகிறது' [8] என்கிறார் பாலா. மேலும் பறவையிடமிருந்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களைத் தம் கவிதைகளில் எடுத்துரைத்துள்ளார். ஒரு பறவையை அழித்து இன்னொரு பறவை உயிர் வாழ்வதில்லை. தனக்காக இன்னொரு பறவை கட்டிய கூட்டை ஆக்கிரமித்துக் கொள்வதும் இல்லை. இதனை,

கூடுகட்டத் தெரியாப் பறவையும்கூட

இன்னொரு கூட்டைக் கலைப்பதில்லை

இன்னொரு கூட்டிற்குத் தீ வைப்பதில்லை[9]

மனிதனோ தான் வாழ்வதற்காக எந்தஒரு மாபாதகச் செயலைச் செய்வதற்கும் தயங்குவதில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

மனிதனும் மனிதமும்

ஒருவருக்கு உதவி செய்வது என்பது பெரும் புண்ணியம் என்பர். ஆனால் இன்று நாம் யாரும் யாருக்கும் உதவி செய்யும் மனநிலையில் இல்லை. அப்படி உதவி செய்யவேண்டும் என்று நினைத்தாலும் நம்முடைய வேலை நம்மை உதவ விடுவதில்லை.

கண்ணற்ற ஒருவர் பாதையைக்

கடக்கக் கை கொடுத்தேன்

என் முகத்தில் இறைவன்

கண் வரைந்தார்[10]

பிறருக்கு உதவிசெய்வதினால் தான் உலகம் இன்னும் உயிர்ப்புடன் இருக்கின்றது. 'வாழ்க்கையைத் தன்னிலிருந்து தான் விலகி அனுபவிக்கவும் சக மனிதனோடு தோளில் கை சேர்த்து நடைபோடவும் அவன் உள்ளுணர்வு வெளிச்சம் உதவுகிறது. இந்த உள்ளுணர்வு வெளிச்சத்தில் தன் காலத்தை, பிரபஞ்சத்தை, மனிதனை, அவன் வாழ்க்கையை, அவன் கல்யாண குணங்களை கண்டு கேட்டு உற்று உணர்ந்து தனக்கு உகப்பானவற்றையும் வெறுப்பானவற்றையும் தீவிரமாக உணர்ந்து கொள்கிறான்' 11 என்ற பாலாவின் கருத்தும் இங்கு நினைவு கூறத்தக்கது.

கையற்ற ஒருவருக்கு பேருந்தில் ஏறக் கை கொடுத்த போது இறைவன் அவருக்குக் கையைக் கொடுத்ததாய் கூறுகின்றார். காலற்ற ஒருவருக்கு கை வண்டி ஏறக் கை கொடுத்தபோது, அவருடைய உடலில் இறைவன் கால் வரைந்தார். மேலும்,

திக்கற்ற ஒருவாருக்கு

வழி சொன்னேன்

என் உருவிற்கு இறைவன்

உயிர் தந்தார்[12]

என்றும் கூறுகின்றார். பசி தின்று கொண்டிருந்த ஒருவர்க்கு குடிக்க பானம் தந்த அவருக்கு இறைவன் இவ்வுலகையே தந்ததாகக் குறிப்பிடுகின்றார். ஒன்றைக் கொடுத்தால் தான் நாம் ஒன்றைப் பெற முடியும் என்பார்கள். அது போல் நாம் மற்றவருக்கு உதவினால் தான் கடவுளும் நமக்கு உதவுவார் என்பதில் இறுதிவரை பாலா உறுதியுடன் இருந்தார்.

வாழ்க்கைச் சுமைகள்

வாழ்க்கையை நாம் சுலபமாக வாழ்ந்து விட வேண்டும் என்று நினைக்கிறோம். 'வாழ்க்கை இப்படித்தான், வாழ்வது என்பது மற்றவர்களை வாழ்விப்பது. நம்முடைய மகிழ்ச்சியை நாம் பகிர்ந்து கொண்டிருந்தால் மற்றவர்களின் மகிழ்ச்சியை எப்பொழுது

கவனிப்பது? வாழ்க்கை என்பது நாம் வாழ்வது என்பது மற்றவரை வாழ்விப்பது என்றால் மற்றவரின் வாழ்க்கையில் அக்கறை கொள்வது என்று பொருள்’ 13 என்கிறார். நம் சுமைகளை நாமே தூக்குவதற்குத் தயாராக இல்லை. பெட்டி நிறைய அணிகளையும், மணிகளையும் தன்னுடைய வீட்டிற்கு எடுத்துக் கொண்டு செல்கிறவன் அதை சுகம் என்று சொல்கிறான். அதே பெட்டியை அடுத்தவருக்கு கொண்டு போய் தருகிறபோது அதை சுமை என்று பொருமுகிறான். வாழ்க்கையில் நமக்கு என்று நாம் பெறுகிறபோது சுகமாக இருப்பவை மற்றவருக்கு என்று தருகிறபோது சுமையாக மாறிவிடுகிறது. அவ்வாறு சுகம் எவ்வாறு சுமையாகின்றது சுமை எவ்வாறு சுகமாகின்றன என்பதனை,

கைப் பையில் கிடக்கும் சிறு

காகித மடிப்பா

தூர வீசித் தொலைத்துவிட?

கழுத்தை ஒடிக்கும் பெருந்

தலைச் சுமையா

சுமைக் கல்லில் கிடத்தித் தலைநிமிர?[14]

நம்முடைய சுமையை நாமே சுமந்து கொண்டு நகர்ந்து போவது என்பது நாகரிகம் இல்லை என்று கருதுகிறோம். குடும்பத்தில் குழந்தைகளைக் கூட சுமப்பதற்கு தயாராக இல்லை. கணவன் தன்னுடைய குழந்தையை மனைவியிடமும், மனைவி தன்னுடைய குழந்தையை கணவனிடமும் கொடுத்துக் கொடுத்து சலித்துப் போகின்றனர். சுமையுடன் நாம் நடக்கிறபோது அது நடைபிண வாழ்க்கையாக நரகமாக மாறிவிடுகின்றது. வாழ்க்கையில் எதுவும் சுமை இல்லை. அன்பு இனிமை, நலம் இனிமை, மற்றவரிடம் நாம் காட்டும் பண்பு இனிமை. அப்போது நம்முடைய சுமை கூட சுகமாக மாறிவிடுகிறது. சுமையை சுகமாக மாற்றுவது நம் கையில் தான் உள்ளது என்கிறார் கவிஞர்.

மண்ணும் மனிதனும்

நாட்டின் கனிம வளங்களான மணலும், மலையும், கல்லும் நமக்குக் கிடைத்த அதிசயங்கள் ஆகும். அவற்றிற்கு நிற வேறுபாடுகள் உண்டு. ஆனால் மனிதன் போல் குணவேறுபாடுகள் இல்லை.

கருப்பாய் சிவப்பாய்

கல்லாய்த் துகளாய்

மலையாய் மடுவாய்க் கிடக்கும்

மண் ஓர் அதிசயம்[15]

பிறப்பதும், வளர்வதும், வாழ்வதும் மண்ணில் தான். மண் ஒருபோதும் பேதம் பார்ப்பதில்லை. தன்னை நம்பி வருபவர்களை ஏமாற்றவும் செய்வதில்லை. மண்ணில் வாழும் மனிதன் தன்குணத்தை மண்போல் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதனைக் குறிப்பிடுகின்றார்.

மண் ஓர் அதிசயம்

மேனியில் ஒட்டினால் அது சேறு

அதனையே உடுத்தினால் அது உழைப்பு[16]

என்று உழைப்பின் பெருமையை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். 'ஓலமிட்டுப் புகழ்ச்சி சொல்வார் உண்மை கண்டிலர் வையத்து மாக்கள்' [17] என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க உழைக்கும் மக்களை சுரண்டிப் பிழைக்கும் முதலாளித்துவத்தை பாலா கண்டிக்கவும் செய்கிறார்.

முதலாளி பசி இல்லை என்றாலும் அவன் வீட்டு மேசையில் பலவகையான பண்டங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை பார்த்தே உண்கிறான். ஆனால் தொழிலாளியோ ஒரு வேலை உணவுக்குக் கூட வழியில்லாமல் வாடுகின்றான். முதலாளிகள் இருந்தும் கொடுப்பதற்கு மனம் இல்லாமல் இருக்கிறார்கள். தொழிலாளிக்கோ இல்லை என்ற திண்டாட்டம். தொழிலாளிகள் வறுமையினால் இருட்டில் இருக்கிறார்கள். முதலாளிகள் பணத்தை செலவு செய்து இருட்டைக் கூட வெளிச்சமாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை,

ஐந்து நட்சத்திர விடுதியில்

இருட்டைக் கூட

மினுக்கும் வெளிச்சமாக மாற்றுகிறது, இல்லையா?[18]

'ஏழையின் குடிசையில் அடுப்பும் விளக்கும் தவிர எல்லாம் எரிகின்றது' என்றான் ஒரு கவிஞன். அந்த அடுப்பு எரிவதற்கும் குடும்பத்தில் ஆணோ, பெண்ணோ உழைத்தால் தான் முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கல்விச் சாலைகள் கோவில்களாகப் பார்க்கப்பட்டது. இன்று செல்வந்தர்களே கல்வி கற்க வாருங்கள் என்கின்றது கல்விச் சாலைகள். கல்வி நிறுவனங்கள் இன்று மனிதத்தை விற்று பணத்தைச் சேர்க்கத் துவங்கியுள்ளது என்பதைப் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்,

செல்வம் கீறிய கோடுகளில்

கல்வி தேவதை நடக்கிறாள்

சரஸ்வதியின் அரசாங்கத்தில்

இலட்சுமியின் கொடி பறக்கிறது[19]

கல்வியின் அதிபதி சரஸ்வதி. செல்வத்தின் அதிபதி இலட்சுமி. இலட்சுமியின் அடியொற்றியே சரஸ்வதி நடக்கிறாள். இந்நிலை மாறவேண்டும் என்பதனை,

தின்னச் சோறு தந்த வீட்டை

அன்னக் காவடிகள் திருடியது போல[20]

அன்னக்காவடிகள் உண்டவீட்டைத் திருடுவது போல் அமைந்து விடும் என்கிறார். ஒரு பூவைப் பார்த்து என்ன செடி என்று அறிந்து கொள்கிறோம். ஆனால் ஒரு மனிதனைப் பார்த்து அவன் நல்லவனா? கெட்டவனா? என்று அறிந்து கொள்ள முடிவதே இல்லை. அடுத்தது காட்டும் பழிங்கு போல் கடுத்தது காட்டும் முகம். இருப்பினும் முகத்தைப் பார்த்து நல்லவர் கெட்டவரை அறிந்து கொள்ளுதல் கடினம் என்பதை,

பூக்கள் அடையாளம்

காட்டலாம்

செடியின் இனத்தை

மனிதனைக் காட்டுமா

ஒரு மனித முகம்?[21]

மனிதர் போன்ற உருவில் கயவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மனிதனை மனிதன் ஏமாற்றுவதும், ஏய்த்துப் பிழைப்பதும் விலங்குகளிடம் இல்லை. வாழ்க்கை என்பது விட்டுக் கொடுப்பதும், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதும் தான். தான் மட்டும் வாழ வேண்டும் என்ற சுயநலத்துடன் வாழ்ந்தால் வாழ்வில் ஒரு பயனும் இருக்காது என்பதனை,

மனிதர் போன்ற கயவர்

கண்ணியம் மிளிரும் போக்கிரிகள்

பெரியவர் மனம் தரித்த குழந்தைகள்

குரூர இளையோர் சுயநலம் வழியும் அறிஞர்

சாகக் கற்றுக் கொண்டிருக்கும் மனிதம்

பார்த்தும் பாராது

வாழ்ந்து கொண்டிருக்கிறேன் நான்.[22]

பார்த்தும் பாராது வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று கவிஞர் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தாக்கம் அவருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் பொதுவாகவே அமைந்துள்ளது. இந்நிலை மாறவேண்டுமெனில் குழந்தை மனதோடு நிகழ்வுகளை அணுகும் மனப்பக்குவம் வேண்டும்.

உயிரற்ற பொம்மை மீது

குழந்தைகள் பொழியும் அன்பைக்

கவனித்ததில்லையா நீ?

குழந்தையின் கனிவுடன்

மனிதரை நேசி[23]

பொம்மை என்று தெரிந்தும் குழந்தைகள் பொம்மைகளை மனிதர்கள் போல் நினைத்து கொஞ்சுகின்றனர். பாரபட்சமின்றி அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துவதே மனிதம் தழைக்க வழியாகும். பண்பட்டவராய் வாழ்வதற்கு மனதைப் பக்குவப்படுத்தவும் வேண்டும் என்பதனை,

மனத்தை வெப்பம் உமிழும்

தீயாக்காதே!

புன்னகை அவிழ்க்கும்

பூவாக்கு![24]

என்று கூறுகிறார். 'சக மனிதரை அங்கீகரிப்பதும் அவர்தம் துன்பதுயரங்களில் மனம் கசிவதும் மனிதநேயக் குணங்களாகும் அதற்குச் சுயநலம், ஊர்நலத்தைத் தாண்டிய

அகண்ட பார்வை தேவை' [25] என்று பாலா குறிப்பிடுகின்றார். அவ்வகையில், மனதினைப் புன்னகை அவிழ்க்கும் பூவாக்கினால் தான் இவ்வுலகில் மனிதம் மேலும் தழைத்தோங்கும் என்பது கவிஞரின் கருத்தாக்கமாகும்.

மனிதனின் வாழ்வியல் முறைகளை கவிஞர் தம்கவிதைகளில் திறம்பட புனைந்துள்ளார். பழையன கழிந்து புதியன புகுத்தல் வேண்டும் என்பதில் உடன்பாடு உண்டு. இருப்பினும் இன்றைய மனிதர்கள் நாகரீகம் எனக்கருதி எதிர்மறையான சிலசெயல்கள் புரிவதை கண்டிக்கவும் செய்கிறார்.

முடிவுரை

திண்ணைகள் உருமாறியதைக் கண்டு வெகுண்டு எழுந்துள்ளார். சமுதாயத்தில் அனைத்தும் இருந்தும் மனிதத்தை மட்டும் காணவில்லை என்பது குறித்து உள்ளம் வெதும்பியுள்ளார். திண்ணைகளைப் போல் மனிதமும் தன்னை இழந்துள்ளதைக் கண்டு மனம் வெதும்பியுள்ளார். மனிதனின் மனநிலைமுதல் இருக்கும் இல்லம்வரை எல்லாம் மாறிவிட்டது. பொதுநலம் பின்தள்ளப்பட்டு எங்கும் எதிலும் சுயநலமே மேலோங்கி உள்ளது. இந்நிலையில், சிலர் மனிதத்தன்மையற்ற செயல்களைச் செய்யத் தயங்குவதில்லை. பலரோ, மனிதத்தைத் தழைக்கச் செய்ய முற்பட்டுள்ளனர். மக்களும் பல்வேறு இன்னல்களுக்கு ஆட்பட்டுள்ளதை எடுத்துரைப்பதுடன் மனிதம் தழைப்பதே அதற்கான தீர்வாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சான்றெண் விளக்கம்

1. பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, அகரம் வெளியீடு, தஞ்சாவூர்- 7, ஐந்தாம் பதிப்பு, ஜனவரி 2011, ப.15
2. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, டிசம்பர் 1999, ப.12
3. மேலது, ப.12
4. மேலது, ப.13
5. மேலது, ப.14
6. மேலது, ப.14
7. பாலா, தமிழ் இலக்கியத்தின் படைப்பு பின்புலம், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர் - 7, முதற்பதிப்பு - 2013, ப.11
8. மேலது, ப.33
9. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, டிசம்பர் 1999, ப.28
10. மேலது, ப.25

11. பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, அகரம் வெளியீடு, தஞ்சாவூர்- 7, ஐந்தாம் பதிப்பு, ஜனவரி 2011, ப.63
12. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, டிசம்பர் 1999, ப.25
13. பாலா, கதவு அருகே சொற்கள், அகரம் வெளியீடு, தஞ்சாவூர்- 7, முதற்பதிப்பு, நவம்பர் 2007, ப.45
14. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, டிசம்பர் 1999, ப.35
15. மேலது, ப.31
16. மேலது, ப.31
17. பாலா, மகாகவி பாரதியின் சிந்தனைவெளி, கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, நவம்பர் 2007, ப.16
18. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, டிசம்பர் 1999, ப.47
19. மேலது, ப.53
20. மேலது, ப.61
21. மேலது, ப.64
22. மேலது, ப.20
23. மேலது, ப.54
24. மேலது, ப.65
25. பாலா, தமிழ் இலக்கியத்தின் படைப்பு பின்புலம், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர் - 7, முதற்பதிப்பு - 2013, ப.36

துணைநூற்பட்டியல்

1. பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, அகரம் வெளியீடு, தஞ்சாவூர்- 7, ஐந்தாம் பதிப்பு, ஜனவரி 2011.
2. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, டிசம்பர் 1999.
3. பாலா, தமிழ் இலக்கியத்தின் படைப்பு பின்புலம், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர் - 7, முதற்பதிப்பு - 2013.
4. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, டிசம்பர் 1999.
5. பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, அகரம் வெளியீடு, தஞ்சாவூர்- 7, ஐந்தாம் பதிப்பு, ஜனவரி 2011.

6. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, டிசம்பர் 1999.
7. பாலா, கதவு அருகே சொற்கள், அகரம் வெளியீடு, தஞ்சாவூர்- 7, முதற்பதிப்பு, நவம்பர் 2007.
8. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, டிசம்பர் 1999.
9. பாலா, மகாகவி பாரதியின் சிந்தனைவெளி, கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, நவம்பர் 2007.
10. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், கவிதா பப்ளிகேஷன், சென்னை - 17, முதற்பதிப்பு, டிசம்பர் 1999.
11. பாலா, தமிழ் இலக்கியத்தின் படைப்பு பின்புலம், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர் - 7, முதற்பதிப்பு - 2013.